# மெய்யான விடுதலையின் சிறந்த வார்த்தை




## 2.6 இந்த வெற்றி

**வேத வசனம்:** **பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள். ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்.**

*1 யோவான் 4:4*

**அறிக்கை:** **உலகத்திலிருப்பவனைவிட என்னில் இருப்பவர் பெரியவர்**



**சத்தியம்:** தேவ ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் சாட்சியின் வசனத்தினாலும் நாம் ஜெயம் கொள்ளுகிறவர்களாய் இருக்கிறோம்.

### வேத பகுதி: மத்தேயு 4:1-11

**பாடம்** "அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார். அவர் இரவும் பகலும் நாற்பதுநாள் உபவாசமாயிருந்தபின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று".

1. "...இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்". என்று பிசாசு சொன்னபோது, கர்த்தராகிய இயேசு எவ்விதம் பதிலளித்தார்? ("வசனம்")

("மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்")

2. "உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து: நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன்" என்று பிசாசு சொன்னபோது, கர்த்தர் அந்த சோதனையை எவ்விதம் மேற்கொண்டார்?

("அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே. உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக")

3. மனிதர்கள் அதிக இன்பம் தரும் செயல்களில் ஈடுபடக்கூடாது என்று தேவன் விரும்புவதாக பலர் எண்ணுகிறார்கள். இதனை ஏற்றுக்கொள்ளுகிறாயா? (இது பொய். ஏன் எனில் மனிதர்கள் அனைவரும் சந்தோஷமாயிருக்கவும், அவரில் களிகூரவும் வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்)

4. இயேசு எவ்விதம் பிசாசின் சோதனைகளை மேற்கொண்டார்? (தேவனுடைய வார்த்தையை பயன்படுத்தி)

5. இன்றும் மனிதருடைய இருதயங்களைத் திருட பிசாசு பலவித பொய்களைச் சொல்லியும் சோதனைகளைத் தந்துகொண்டும் இருக்கிறான் என்று நீ எண்ணுகிறாயா?

6. சங்கீதம் 119:9 ன் படி வாலிபன் தன் வழிகளை எவ்விதம் சுத்தமாகக் காத்துக்கொள்ள முடியும்? (வேத வசனத்தின்படி வாழுவதன் மூலம்)

**முடிவுரை:** கர்த்தராகிய இயேசு உயிர்த்தெழுந்த இரட்சகர். அவரைப்போலவே நாமும் பிசாசின் தந்திரங்களையும் சோதனைகளையும் ஜெயிக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார். வேதபுத்தகம் சொல்லுகிறது "மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்". ஆகையால் நாம் பிசாசின் வார்த்தைகளைத் தள்ளிவிட்டு தேவனுடைய வார்த்தைகளையே பேச வேண்டும்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.